IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 43/2009

Deposition of Witness : DW 2

Name : முனிரத்தினம் (வயது – 70)

Father's Name /W/o : த/பெ பட்டாபி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : மேல்பாக்கம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.10.2025.

## குறுக்கு விசாரணை

1. வாதி தாக்கல் செய்த தாவாவை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதி என் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரியாமல்தான் நான் இந்த வழக்கின் தரப்பினராக சேர்ந்துள்ளேன் என்றால் சரிதான். என் பிரமாண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தார்.

2. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியும் . நான் மேல் பாக்கத்தில் எத்தனை வருடங்களாக குடியிருக்கிறேன் 20 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நாகரத்தினம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் மூத்த சகோதரி. ஜோதிரத்தினம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் என் தங்கை ஆவார்.

3. ஜீவரத்தினம்மாள் யார் என்றால் என் மூத்த சகோதரி ஆவார். 5 முதல் 8 பிரதிவாதிகள் யார் என்றால் ஜீவரத்தினம்மாளின் பிள்ளைகள். நாகரத்தினம்மாள் தற்போது உயிரடன் இருக்கிறாரா என்றால் காணாமல் போய்விட்டார். ஜீவரத்தினம்மாள் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. நாகரத்தினம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 பெண் (தாட்சாயணி). ஜோதிரத்தினம்மாள் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் என் பக்கத்து தெருவில் ஜோதிரத்தினம்மாள் வீடு உள்ளது.

4. ஜோதிரத்தினம்மாள் எந்தெந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு சொத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் மேல்பாக்கத்தில் உள்ளது. தாவா சொத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 150 அடி இருக்கும். சரசம்மாள் ஏற்கனவே சோளிங்கர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சரசம்மாள் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சரசம்மாளுக்கு எத்தனை பாகத்தில் எத்தனை பாகம் கேட்டார் என்றால் 10 இல் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்.

5. குப்பையா தேவருக்கு எத்தனை மனைவி என்றால் 2 பேர் முனியம்மாள் மற்றும் சரசம்மாள். சோளிங்கர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் சரசம்மாளுக்கும் முனியம்மாளுக்கும் பாகம் பிரித்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் இல்லை சரசம்மாளுக்கு தனியாக பாகம் பிரித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் நாகரத்தினம்மாள், ஜீவரத்தினம்மாள், ஜோதிரத்தினம்மாள், கஜேந்திரம்மாள் அவர்களுக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. சரசம்மாளுக்கு மட்டும் தான் பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி சோளிங்கர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு எண்.25/1978 இந்த நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டு வழக்கு எண்.75/1996 வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது.

6. குப்பையா தேவர் முதல் மனைவி முனியம்மாள் மற்றும் அவர் பிள்ளைகள் பாகப்பிரிவினை செய்ததாக என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எந்த வருடத்தில் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் 1985 ஆண்டில் பாகப்பிரிவினை நடந்தது. மேற்படி 1985 பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்ட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1985 பாகப்பிரிவினை பத்திரம் நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி 1985 பாகப்பிரிவினை பத்திரம் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பதிவானது என்று யார் எனக்கு சொன்னது என்றால் என் அக்கா நாகரத்தினம்மாள் (1 ஆம் பிரதிவாதி) 1985 ஆம் ஆண்டில் சொன்னார். எனக்கு எந்த வருடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் 1979 ஆம் ஆண்டு நடைபெற்றது.